தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திருத்தியமைத்தார்!

# ஆணையத்தின் தலைவராக - ரெவரன்ட் ஃபாதர் ஜோ. அருண் நியமனம்!

## துணைத்தலைவர் - எம்.எம்.அப்துல் குத்தூஸ் எனும் இறையன்பன் குத்தூஸ்!

சென்னை, ஜூலை 25 - தமிழ்நாடுசிறுபான்மையினர் ஆணையத்தை ரெவரன்ட் பாதர் ஜோ அருண் அவர்கள்தலைமையில்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருத்தியமைத்து உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழிவாரியானசிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும், 1989ஆம் ஆண்டில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப் பட்டது.

அதன்பின், முத்தமிழறிஞர்கலைஞர்அவர்கள்2010 ஆம் ஆண்டில் பிறப்பித்த தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம்,2010(Act 21 of 2010)இன்படி சிறுபான்மை யினர் ஆணையம் சட்டப்பூர்வ அதிகாரம்பெற்றஆணையமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர்ஆணையம், சிறுபான்மைச்சமுதாயங்களின் கல்வி, சமூக, பொருளாதார மேம்பாடுகளுக்காகசெயல்பட்டுவருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்த ஆணையத்தின்தலைவராக ரெவரன்ட் பாதர் ஜோ அருண் அவர்களையும், துணைத் தலைவராக எம்.எம்.அப்துல்குத்தூஸ்எனும் இறையன்பன் குத்தூஸ் அவர்களையும், ஹெமில்டன் வெல்சன், ஏ.சொர்ணராஜ்,நாகூர்ஏ.எச்.நஜிமுதீன், பிரவீன் குமார் தாட்டியா, ராஜேந்திரபிரசாத்,எம்.ரமீத் கபூர், ஜெ. முகமது ரபி, எஸ். வசந்த் ஆகியோரை உறுப்பினர்களாகவும் நியமித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு - பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவராக -

# சி.பெர்னாண்டஸ் ரத்தின ராஜா நியமனம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை,ஜூலை 25- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக சி. பெர்னாண்டஸ் ரத்தின ராஜாவை நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து பிற்படுத்தப்பட்டோர், மகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை - அரசு முதன்மைச் செயலாளரின் அறிவிப்பு வருமாறு:

தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், பொருளாதார நிலையை உயர்த்தவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கடந்த 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டது. இக்கழகம் சிறுபான்மையின மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்த தனிநபர் மற்றும் குழுக்களுக்கு உதவிடும் வகையில் குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு பல்வேறு கடனுதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மேலும் சிறப்பாகச் செயல்படும் நோக்கில் அதன் தலைவராக சி. பெர்னாண்டஸ் ரத்தின ராஜாவை நியமனம் செய்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருகிற சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராவோம்!

# நம் தலைவரின் சாதனைத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வோம்!

## 234 சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்களுக்கு நடைபெற்ற பாராட்டு நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூலை 25-**

**சென்னையில், கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ள, 2026 சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில், சட்டமன்றத் தொகுதி வாரியாகச் செயல்பட்டு வரும் தொகுதிப் பார்வையாளர்களை, குறிஞ்சி இல்லத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து கலந்துரையாடியதுடன் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டிப் பேசினார்.**

**இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 40 தொகுதிகளிலும் கழகம் வெற்றி பெற சிறப்புற பணியாற்றிய தொகுதிப் பார்வையாளர்களுக்கு அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு குறுகிய கால அறிவிப்பில், நீங்கள் எல்லாம் இங்கே கலந்துகொண்டிருக்கிறீர்கள். எங்களின் இந்த ஒருங்கிணைப்புக் குழு, இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்த வேண்டுமென்று, நேற்று முன்தினம்தான் முடிவு செய்தது. அப்போது நம் தலைவர்கள் அவர்கள் என்னிடத்தில், 'முதலில் தொகுதிப் பார்வையாளர்கள் அத்தனை பேரையும் அழைத்து நன்றி சொல்ல வேண்டும், அவர்களைப் பாராட்ட வேண்டும்' என்று இருந்தார்கள்.

**கருத்துகளுக்கு ஏற்ற நடவடிக்கைகள்**

நான் உடனே, `நம் குறிஞ்சி இல்லத்தில் நாளை மறுநாள் வைத்துக்கொள்ளலாம்' என்றேன். `எல்லாரும் வந்துவிடுவார்களா' என்று கேட்கும்போது, `நான் எல்லாரும் கண்டிப்பாக வருவார்கள்' என்று சொல்லி, இந்த நிகழ்ச்சி இன்று சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

உங்களையெல்லாம் ஏற்கெனவே, தலைமைக் கழகத்திலிருந்து அறிவித்து, நம் அறிவாலயத்தில் தேர்தலுக்கு இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பே ஒவ்வொரு நாடாளுமன்ற மாவட்ட நிர்வாகிகளையெல்லாம் சந்திக்கும்போது நீங்களும் உங்களின் கருத்துகளைத் தெரிவித்திருந்தீர்கள். அதன்படி, சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சில நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அப்போது, உங்களைச் சந்திக்கிற வாய்ப்புக் கிடைத்தது. அதேபோல், நான் பிரச்சாரத்திற்கு வரும்போதும், ஒவ்வொரு தொகுதியிலும் உங்களைச் சந்திக்கிற வாய்ப்புக் கிடைத்தது. இப்போது நீங்கள் அத்தனைப் பேரும் ஒன்றாகக் கூடி, இங்கு வந்திருக்கிறீர்கள். என் அழைப்பை ஏற்று வந்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எதிர்பார்த்த அதே வெற்றி**

நாடாளுமன்றத் தேர்தலில் நாம் எதிர்பார்த்தது போல அதே வெற்றி கிடைத்துள்ளது. 40க்கு 40 வெற்றி பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன், தேர்தல் பார்வையாளர்கள் நீங்கள் எல்லோரும் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டீர்கள். கிட்டத்தட்ட ஒரு வருடம், இன்னும் சொல்லப் போனால் சில பேர், வீட்டையே மாற்றிவிட்டு அந்தத் தொகுதிக்கே சென்று தங்கிவிட்டீர்கள். அந்த அளவிற்குச் சிறப்பாக உங்களிடம் என்னென்ன பணிகள் எல்லாம் சொல்லி இருந்தோமோ, அத்தனைப் பணிகளையும் 95 சதவிகிதம் பேர் சிறப்பாகச் செய்திருக்கிறீர்கள்.



95 சதவிகிதம் பேர்தான் செய்திருக்கிறீர்கள், இன்னும் இருக்கக்கூடிய அந்த 5 சதவிகிதம் பேர் இன்னும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராவோம்**

வருகின்ற சட்டமன்றத் தேர்தல் எவ்வளவு முக்கியமான தேர்தல் என்று உங்களுக்கே தெரியும். சென்ற முறை நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோது மக்களின் வாக்குகளைப் பெற்று அ.தி.மு.க ஆட்சியில் என்னென்ன பிரச்சினைகள் எல்லாம் இருந்தது? 'மாநில உரிமைகளையெல்லாம் பி.ஜே.பியிடம் அடகு வைத்துவிட்டார்கள். மாநில உரிமைகளையெல்லாம் மீட்க வேண்டும் என்றால், நாம் ஆட்சிக்கு வரவேண்டும்' என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டு அந்த வெற்றியை அடைந்தோம்.

இப்போது, ஆளும் கட்சியாக இருக்கிறோம். எனவே, வருகிற 2026ஆம் ஆண்டு வர இருக்கிற சட்டமன்றத் தேர்தலின் வெற்றி மிகமிக முக்கியமானது. அதற்காகத்தான் இந்த ஒருங்கிணைப்புக் குழுவை தலைவர் அவர்கள் அறிவித்தார்கள்.

**முதல் நிகழ்ச்சி**

எங்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் முதல் நிகழ்ச்சியே தொகுதிப் பார்வையாளர்கள் உங்களைச் சந்தித்து, இந்தக் கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த அளவிற்கு முக்கியம், இந்த 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல். இந்த முறை நம் தலைவரின் சாதனைகளை, அவர் கொண்டு வந்துள்ள ஒவ்வொரு திட்டங்களையும் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு உங்கள் அத்தனைப் பேருக்கும் இருக்கிறது.

எப்படி சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிறப்பாகப் பணியாற்றினீர்களோ, அதே போல் வர இருக்கிற சட்டமன்றத் தேர்தலிலும் உங்களுக்குக் கொடுக்கபபடக்கூடிய பணிகளைச் சிறப்பாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை தலைவருக்கு இருக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார். `கட்சி உனக்கு என்ன செய்தது என்று கேட்பதைவிட, நீ கட்சிக்கு என்ன செய்தாய்? என்று கேள். அவர்தான் உண்மையான தொண்டன்' என்று சொல்வார். அதற்கு மிகுந்த பொருத்தமானவர்கள் இங்கு வந்திருக்கக்கூடிய தொகுதி பார்வையாளர்களாகிய நீங்கள்தான்.

நீங்கள் அனைவரும் அதை உணர்ந்து, வர இருக்கக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் நமது தலைமைக் கழகம் என்ன சொல்கிறதோ, அந்தப் பணிகளை விரைந்து சிறப்பாகச் செய்து முடிப்போம் என்று கூறிக்கொண்டு வந்திருக்கும் உங்கள் அத்தனைப் பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த வாய்ப்பை அளித்த கழகத் தலைவர் அவர்களுக்கும், ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த அனைத்து மூத்த நிர்வாகிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா (ஏ) ரகு, இளையராஜா, ப.அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி. ஆனந்தகுமார் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மோசமான நிதி நிலைமையில் வைத்து - 'உதய்' மின் திட்டத்தில் இணைந்து - மின் பகிர்மானக் கழகத்தைச் சீரழித்தது அ.தி.மு.க. அரசு!

# தற்போதைய மின் கட்டண உயர்வுக்கு அ.தி.மு.க. அரசே முழுக் காரணம்!

## நிதி - மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**சென்னை, ஜூலை 25-**

**சென்னை-அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் மாலை, செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த நிதி மற்றும் மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, "தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தை அ.தி.மு.க. அரசு மோசமான நிதி நிலைமையில் வைத்துச் சென்றது - 'உதய்' மின் திட்டத்தில் இணைந்தது போன்ற செயல்களால், மின் பகிர்மானக் கழகத்தைச் சிதைத்துச் சீரழித்தது அ.தி.மு.க. அரசு" என்றும் - "தற்போதைய மின் கட்டண உயர்வுக்கு கடந்த கால அ.தி.மு.க. அரசே முழுக் காரணம்!" என்றும் கடுமையாகக் கண்டனம் தெரிவித்தார்.**

*சென்னை அண்ணா அறிவாலயத்தில், நேற்று, மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களைச் சந்தித்தார்.*

*அப்போது அவர் குறிப்பிட்டதாவது:*

*மின்கட்டண உயர்வு தொடர்பாக, அ.தி.மு.க. இன்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பது, வேடிக்கையாக இருக்கிறது. பிள்ளையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போல் அவர்களது நடவடிக்கை இருக்கிறது.*

*மின்கட்டண உயர்வுக்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் அ.தி.மு.க.வினர் தான். 'உதய்' மின்திட்டத்தில் அனைத்து மாநிலமும் இணைய வேண்டும் என அப்போதைய ஒன்றிய அரசு சொன்ன போது, அப்போதை தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா திட்டவட்டமாக மறுத்தார். தி.மு.க.வும் எதிர்த்தது.*

*ஆனால் அம்மையார் மருத்துவமனையில் இருந்த நிலையில், அன்றைய முதலமைச்சராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் மேலே இருந்து வந்த அழுத்தத்தின் காரணமாக உதய்மின் திட்டத்தில் இணைத்தார்.*

*கடந்த 2017 ஆம் ஆண்டு அப்போதைய மின்துறை அமைச்சர் கையெழுத்துப் போட்டு இந்தத் திட்டத்தில் இணைத்து கொண்டார். இது, ஆண்டு தோறும் மின் கட்டண உயர்வுக்குக் காரணமாக அமைந்துவிட்டது.*

**மின்கட்டண உயர்வு:**

**அ.தி.மு.க. அரசு தந்த உத்தரவாதம்!**

*இந்த முத்தரப்பு ஒப்பந்தத்தில் முக்கிய சரத்து என்னவென்றால், ஆண்டுதோறும் மின்கட்டண உயர்வை தமிழ்நாடு அரசு செயல்படுத்த வேண்டிய உத்தரவாதத்தை அளித்தது அன்றைய அ.தி.மு.க. அரசு.*

*கடந்த 2011 12ம் ஆண்டு வரை, தி.மு.க. ஆட்சியில் இருந்த போது, மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு ஒட்டு மொத்த நிதி இழப்பு 18 ஆயிரத்து 954 கோடி ரூபாய் ஆக இருந்தது.*

*பின்னர் 10 ஆண்டுகால திறனற்ற அ.தி.மு.க. ஆட்சியில் இந்தச் செலவு, 94 ஆயிரத்து 312 கோடி ரூபாய் ஆக அதிகரித்ததுடன், தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முன்பு வரை, 1 லட்சத்து 13 ஆயிரத்து 266 கோடி ரூபாய் ஆக தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஒட்டு மொத்த நிதி இழப்பு அதிகரித்தது. இதற்குக் காரணம் யார்? அ.தி.மு.க. அரசு தான். பின்பு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்பு நிதி இழப்பினை அரசே ஏற்றுக் கொண்டு உள்ளது.*



*இந்த நிதி இழப்பை முந்தைய அரசு வழங்காத காரணத்தால், தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கான கடன், 43 ஆயிரத்து 493 கோடி ரூபாய் ஆக இருந்தது. இது, அ.தி.மு.க. ஆட்சியின் பத்து ஆண்டுகளில் மூன்று மடங்கு உயர்ந்து, 2021 தி.மு.க. ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்பு, கடன் மட்டும், 1 லட்சத்து 59ஆயிரத்து 823 கோடி ரூபாயாக வந்திருக்கிறது.*

*இந்த கடனுக்கு வட்டி கட்ட வேண்டும். வட்டியைப் பொறுத்தவரை, 2011 தி.மு.க. ஆட்சியில் இருக்கும் வரை, 4,588 கோடி ரூபாய் ஆக இருந்தது. பின்பு 259 சதவீதம் ஆக அ.தி.மு.க. ஆட்சியில் கூடியது. அதன்படி வட்டி மட்டும் 2021ல் 16511 கோடி ரூபாய் ஆக வந்திருக்கிறது.*

*இந்த சூழலில் தான், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் நிதி நிலைமையை மோசமாக வைத்து விட்டுச் சென்றார்கள். இந்த இழப்புகளைச் சரி கட்டதான் தற்போதைய மின் கட்டண உயர்வு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். 1 கோடி பேருக்கு மின்கட்டண உயர்வு வராது. குறைந்த அளவில் தான் மின் கட்டண உயர்வு உயர்த்தப்பட்டுள்ளது. பிற மாநிலங்களை ஒப்பிட்டு பார்க்கையில், மிக குறைவான அளவில் மின் கட்டண நிர்ணயம் தமிழ்நாட்டில் மட்டும் தான்.*

*அ.தி.மு.க. ஆட்சியில் 2012, 13, 14 ஆண்டுகளில் முறையே 3.7, 3.57, 16.33 சதவீதம் என மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. அதையெல்லாம் மறைத்து விட்டு மக்களை ஏமாற்றும் வகையில் அ.தி.மு.க.வினர் இன்று போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.*

*இன்று மின்வாரிய நிதிநிலை நெருக்கடியை சமாளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு, பங்கு மூலதனம், மின்கட்டண மானியம், கடன் உதவிகள் என வழங்கி கொண்டு வருகிறது.*

*வருவாய் இழப்பை சரி செய்யும் வகையிலும் அரசு மானியம் வழங்கி வருகிறது. இதற்காக மட்டும் 32 ஆயிரத்து104 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்துக்கு வழங்கி இருக்கிறது.*

*கடந்த நிதியாண்டில் மின்வாரிய நட்டத்தை பொறுத்தவரை 23 24ல் 3,429 கோடி ரூபாய் ஆக குறைந்துள்ளது இது அரசின் சீரமைப்பு நடவடிக்கை. மின்சார வாரியத்துடன் நிதி ஆதாரங்களை உயர்த்தக்கூடிய பல்வேறு நடவடிக்கைகளை மின்வாரியம் மேற்கொண்டு வருகிறது. செலவுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.*

*மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் நிதிநிலைகளின் படி,1 7 2023 அன்று, நுகர்வோர் விலை குறியீட்டு எண்ணின் படி, அனைத்து மின் இணைப்புக்கு உயர்த்த வேண்டிய 4.7 சதவீத கட்டண உயர்வுக்கு பதிலாக அன்றைய கட்டண உயர்வாக 2.18 சதவீதம் மட்டுமே உயர்த்தப்பட்டது. இதில் கூட, வீடுகளுக்கான கட்டண உயர்வை அரசே ஏற்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.*

*2024 ஜூலை மாதத்தை பொறுத்த வரை, 2023 ஏப்ரல் மாத்தின் விலை குறியீட்டு எண்178.1 மற்றும் 2024 ஏப்ரலில் விலை குறியீட்டு எண் 186.7 என கணக்கீட்டால், தற்போது வெறும், 4.83 சதவீதம் மட்டுமே மின் கட்டணம் உயர்ந்துள்ளது. ஆனால் மின்கட்டண உயர்வால் 40 ஆயிரம் கோடி ரூபாய் வரை வருமானம் மின்வாரியத்துக்கு வந்து விட்டதாக சில அரசியல் கட்சியினர் கூறுகின்றனர். அது உண்மையல்ல. மின் கட்டண உயர்வால், 2280 கோடி ரூபாய் மட்டுமே வருவாய் அதிகரிக்கிறது, தமிழ்நாடு அரசின் மானியமும் 500 கோடி ரூபாய் ஆக வந்திருக்கிறது. எனவே, அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த போது, உதய் மின் திட்டத்தில் சேர்ந்ததுதான் இதற்கு காரணம். அ.தி.மு.க. பற்ற வைத்த நெருப்புதான், இன்று பரவ காரணம். அதனை தடுத்து சீரமைக்கும் நடவடிக்கையை தி.மு.க. அரசு செய்து வருகிறது.*

*இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.*

*பின்னர் செய்தியாளர்கள் கேள்விகளுக்கு அமைச்சர் பதில் அளித்தார்.*

**கேள்வி:** *மாதந்தோறும் மின்கட்டணம் கணக்கீடு அறிவிப்பு என்னாயிற்று?*

***அமைச்சர் தங்கம் தென்னரசு:*** *ஸ்மார்ட் மீட்டர் தேவையாக இருக்கிறது. அதன் கொள்முதல் தொடர்பாக ஒப்பந்த புள்ளி கோரப்பட்டுள்ளது. வந்துள்ள விலைபுள்ளிகளை கொண்டு பரிசிலீத்து வருகிறோம். ஒப்பந்தம் இறுதி செய்த பின்பு, ஸ்மார்ட் மீட்டர் கொள்முதல் முடிந்து, நுகர்வோருக்கு பொறுத்தப்பட்டு பின்பு, இந்த கணக்கீடு முறை அமலுக்கு வரும்.*

**கேள்வி:** *சில இடங்களில் மின் கட்டணம் கணக்கீட்டில் தவறு நடக்கிறதே?*

***அமைச்சர் :*** *கணக்கீட்டில் தவறு நடந்தால் தெரியப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**கேள்வி:** *நிலக்கரி இறக்குமதியில் முறைகேடுக்கு பதில்?*

***அமைச்சர் :*** *நிலக்கரி இறக்குமதி முறைகேடு அ.தி.மு.க. ஆட்சியில் தான். ஆகையால் கொள்முதலில் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.*

**கேள்வி:** *ஒன்றிய பட்ஜெட் குறித்து கருத்து?*

***அமைச்சர் :*** *ஒன்றிய பட்ஜெட்டை பொறுத்தவரை, தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டுள்ளது. பல மாநிலங்களுக்கு நிதியை அள்ளி வழங்கி இருக்கிறார்கள். நமது முதலமைச்சரின் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை. இந்த பட்ஜெட் தமிழ்நாடு மக்களை வஞ்சித்து உள்ளது.*

*இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.*